# ஆற்காடு நகராட்சி

# 2017-2018 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

**அ. அறிக்கை**

**1. அமைப்பும் மேலாண்மையும்**

இவ்வறிக்கை இந்நகராட்சியின் 58 வது நிர்வாக அறிக்கையாகும். வரலாற்று சிறப்புமிக்க இந்நகராட்சி 1899 ஆம் ஆண்டு பேரூராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. இந்நகரம் படிப்படியாக வளர்ச்சியடைந்து 1959 ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்று முதல் 01.04.1959 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை (நிலை) எண் 724ல் மூன்றாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டன. மேலும் 07.02.1975 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை (நிலை) எண் 200ன்படி 01.04.1975 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.5)ன் 22.05.1998 ஆம் தேதிய 85 (நிலை) எண் அரசு ஆணைப்படி முதல் நிலை நகராட்சியாகவும் உயர்த்தி ஆணைகள் வழங்கப்பட்டன. இந்நகராட்சிப் பகுதியின் மொத்தப்பரப்பளவு 7.49 சதுர கிலோ மீட்டர்களாகும்.

**2. நிர்வாக எல்லை**

ஆற்காடு நகரம் தாஜ்புரா மற்றும் வேப்பூர் முதலிய வருவாய் கிராமங்களின் (Revenue Villages) சில பகுதிகள் இந்நகராட்சியின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளாகும். 2011 ஆம் ஆண்டின் மக்கட் தொகை (Census) கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள்தொகை 55,955 ஆகும். 11.06.96 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நகரமன்றத் தேர்தல்) துறையின் 135ம் எண் அரசாணை (நிலை)ப்படி மக்கள்தொகை அடிப்படையில் 28 வார்டுகளாக இருந்ததை 30 வார்டுகளாக மறு பிரிவினை செய்து ஆணைகள் வழங்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டது. 17.10.2011–ல் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று 12.09.2016 வரை திரு.ஆர்.புருஷோத்தமன் அவர்கள் நகரமன்ற தலைவராக பணியாற்றிய உள்ளார். பிறகு உள்ளாட்சி தேர்தல் நடைபெறவில்லை. இந்நிதியாண்டில் ஆணையாளரே நகர்மன்ற தனி அலுவலராக பணியாற்றியுள்ளார்.

**3. நகரமன்றம்**

அறிக்கையாண்டில் 15 நகரமன்றக் கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் மொத்தம் 297 பொருட்கள் கலந்துரையாடி முடிவு செய்யப்பட்டன. அறிக்கையாண்டில் இந்நகரமன்றத்தில் 4 உள்ளூர் திட்டக்குழுமக் கூட்டங்களும் நடைபெற்றன. அவற்றுள் மொத்தம் 93 பொருட்களும் கலந்துரையாடி முடிவு செய்யப்பட்டன.

**நகரமன்றத் தலைவர்**

01.04.2017 முதல் 31.03.2018 வரை திரு.ஐ.மாடசாமி, எம்.ஏ., ஆணையாளர் அவர்கள் , திரு.கோ.ஆனந்தஜோதி,பொறியாளர் & ஆணையர் (பொ) மற்றும் திரு.கே.தமிழரசு, மேலாளர் (ம) ஆணையர்(பொ) அவர்கள் நகர்மன்ற தனி அலுவலராக பணியாற்றியுள்ளார்.

**ஆணையாளர்.**

அறிக்கையாண்டில் திரு.ஐ.மாடசாமி, எம்.ஏ., ஆணையாளர் அவர்கள் , திரு.கோ.ஆனந்தஜோதி,பொறியாளர் & ஆணையர் (பொ) மற்றும் திரு.கே.தமிழரசு, மேலாளர் (ம) ஆணையர்(பொ) அவர்கள் ஆணையாளர்களாக ஆக பணியாற்றியுள்ளனர்.

**பொறியாளர்**

அறிக்கை ஆண்டில் திரு.கோ.ஆனந்தஜோதி, அவர்கள் நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்.

**மேலாளர்**

அறிக்கையாண்டில் 01.04.2017 முதல் 31.03.2018 வரை திரு.கே.தமிழரசு மற்றும் திரு.ஜி.பழனி அவர்களும் மேலாளர்களாக பணியாற்றியுள்ளார்.

## 5. கூட்டங்கள்

இவ்வாண்டில் மொத்தம் 15 கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

1) நடந்த கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை -- 15
2) சாதாரண கூட்டங்கள் -- 12
3) அவசரக்கூட்டங்கள் -- 3
4) சிறப்புக் கூட்டங்கள் -- 0
5) முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை -- 297

அறிக்கையாண்டில் 297 மன்றப் பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 297 பொருட்கள் முடிவு செய்யப்பட்டன. எந்தப் பொருளும் மன்றத்தால் ஒத்திவைக்கப் படவில்லை. குறிப்பிடத்தக்க மற்ற நடவடிக்கைகள் ஏதும் அறிக்கையாண்டில் நடைபெறவில்லை.

## 6. குழுக்கள்

அ) அறிக்கையாண்டில் பின்வரும் குழுக்கள் செயல்பட்டன. குழுக்கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவைகள் முடிவு செய்த பொருட்களின் எண்ணிக்கை கீழே தெரிவிக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | குழுவின் பெயர் | நடந்த கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்த பொருட்கள் |
|---|---|---|---|
| 1 | வரி முறையீட்டுக்குழு | -- | -- |
| 2 | உள்ளூர் திட்டக்குழு | - | - |
| 3 | நியமனக்குழு | 01 | 01 |
| 4 | ஒப்பந்தக்குழு | -- | -- |
| 5 | **மொத்தம்** | - | - |

## ஆ) தற்காலிகக் குழுக்கள்

அறிக்கையாண்டில் தற்காலிக குழுக்கள் ஏதும் நியமிக்கப்படவில்லை.

## 7. மேலாண்மை.

பொதுப்பணியாளர்கள் மற்றும் வரி வசூலிப்போர் ஆகியோரின் ஊதியத்திற்காக இவ்வாண்டு ரூ. 4,85,41,926/–ம் பொது சுகாதாரத்துறை பணியாளர்கள் ஊதியத்திற்கு ரூ.4,74,09,783/–மற்றும் குடிநீர் பணியாளர்களுக்கு 27,22,771/– செலவாயிற்று. அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நியமனம் மற்றும் தண்டனைகள் பற்றி தமிழ்நாடு அரசு ஆணைகளில் விதிக்கப்பட்ட சட்டத் திட்டங்கள் முறையாக பின்பற்றப்பட்டன.

## 8. சிப்பந்திகள் – பொறியாளர்

அறிக்கை ஆண்டில் 01.04.2017 முதல் 29.02.2018 வரை திரு.கோ.ஆனந்தஜோதி அவர்கள் நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்.

## உதவி/இளநிலை பொறியாளர்

அறிக்கை ஆண்டில் 01.04.2017 முதல் 31.03.2018 வரை திரு.எஸ்.சம்பத்குமார் உதவி பொறியாளராகவும் பணியாற்றி உள்ளனர்.

## 9. சாலைகள்

இந்நகர எல்லைக்குள் செல்லும் கீழ்கண்ட தமிழ்நாடு அரசின் பெருவழித்துறைக்குச் சொந்தமான சாலைகள் அத்துறையினரால் பேணப்பட்டு வருகின்றன.

இராணிப்பேட்டை – கிருஷ்ணகிரி முதன்மைச்சாலை – தேசிய நெடுஞ்சாலை
ஆற்காடு – திண்டிவனம் சாலை – மாநில நெடுஞ்சாலை
ஆற்காடு – ஆரணி வந்தவாசி சாலை – மாநில நெடுஞ்சாலை

நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளில் மொத்த நீளம் 78.370 கிலோ மீட்டர்கள். இதில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தார்சாலைகளின் நீளம் 6.720 கி.மீ.

**சாலைகளின் விவரம்**

1) கான்கிரீட்சாலை 25.156 கி.மீ. (2) கருங்கல் சாலை 0.983 கி.மீ (3) மொரம்பு சாலை 4.377 கி.மீ. (4) தார்சாலை 47.854 கி.மீ. மொத்தம் 78.370 கி.மீ.
2) இவ்வாண்டில் வாகன போக்குவரத்து, சுஙக வரி, முத்திரைத்தாள் வாயிலாக கீழ் விதிக்கப்படும் வரியினங்கள் வாயிலாக மாநில அரசினரிடமிருந்து கீழ்கண்ட உதவித்தொகைகள் பெறப்பட்டன

**1. சுஙகவரி முத்திரைத்தாள்**

**அ) சாலைகள்**

அறிக்கையாண்டில் சாலைகள் அமைத்திட முதலீட்டுச் செலவு ரூ.50,00,000/– செலவிடப்பட்டுள்ளது.

**ஆ) துறைக் கட்டிடங்கள்**

இத்தலைப்பின் கீழ் கட்டிடங்கள் கட்ட மற்றும் பராமரிக்க செலவு ஏதும் செய்யப்படவில்லை.

**இ) தஙகும் விடுதிகள்**

இந்நகராட்சியில் தங்கும் விடுதிக்கென ஒரு கட்டிடம் உள்ளது. ஆனால் இது தங்கும் விடுதியாக பயன்படுத்த இயலாததால் தற்போது காலியாக உள்ளது.

**ஈ) சத்திரஙகளும் தண்ணீர் பந்தல்களும்.**

இந்நகராட்சியால் சத்திரங்கள், தண்ணீர் பந்தல்கள் ஏதும் பேணப்படவில்லை.

## 10. விளக்கு

அறிக்கையாண்டில் 2487 மின் விளக்குகள் பயன்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்ட தெருவிளக்குகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| CFL விளக்குகள் | – | 816 |
| குழல் விளக்குகள் 4' | – | 1486 |
| சோடியம் விளக்குகள் | – | 0 |
| உயர்கோபுர மின்விளக்கு | – | 6 |
| LED விளக்குகள் | – | 179 |
| **மொத்தம்** | – | **2487** |

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாநில நிதிக்குழு மற்றும் நகராட்சி மூலம் தாழ்வழுத்த மின் இணைப்புகளுக்காக செலுத்தப்பட்ட மொத்த மின் கட்டணம் ரூ.1,29,12,875/– ஆகும்.

## 11. கல்வி

01.04.1990 முதல் அனைத்து ஆசிரியை, ஆசிரியர்களும் உதவிக்கல்வி அலுவலர், ஆற்காடு அவர்களின் கீழ் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

**1. தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்**

1982–83 ஆம் ஆண்டில் வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள 2 வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்க அரசு ஆணையிட்டுள்ளன. இத்திட்டத்தை இரு வகையாக பிரித்து முதல் வகையாக 2 வயது முதல் 4 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கும் இரண்டாவது வகையாக ஆரம்ப உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 5வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கும் பகல் உணவு வழங்க திட்டமிட்ட மேற்படித் திட்டம் சீரிய முறையில் இந்நகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதில் 2 பிளஸ் 4 சத்துணவுத் திட்டம் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அரசாணை (பல்வகை எண் 237 நாள் 22.07.1997 மற்றும் சமூக நலத்துறை இயக்குநர் அவர்களின் நேர்முகக் கடித எண் 73082 ஐ.சி.டி.எஸ். 1–1/94 நாள் 30.09.97ன்படியும் 14.10.1997 பிற்பகல் முதல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு செயல்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் இத்திட்டம் இந்நகராட்சியில் நடைமுறையில் இல்லை.

**2. தமிழ்நாடு அரசு பள்ளிப்பிள்ளைகள் சத்துணவுத் திட்டம்**

5 வயது முதல் 10 வயது வரை மற்றம் 10 வயது முதல் 14 வயது முடிய உள்ள குழந்தைகளுக்காக 15.09.1982 முதல் இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 7 பள்ளிகளில் இத்திட்டம் துவங்கப்பெற்று சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக ஒரு நாளைக்கு சராசரி 768 பள்ளி பிள்ளைகள் பயனடைகின்றனர். மேற்கண்ட 7 சத்துணவு மையஙகளுக்காக அரசிடமிருந்து பெறப்பட்ட மான்யம் ரூ.183134/- ஆகும். அறிக்கை ஆண்டில் ரூ.168220/- செலவு செய்யப்பட்டது.

சத்துணவு மையஙகளுக்கு 5 பள்ளி அமைப்பாளர்களும் 5 சமையலர்களும் 5 உதவியாளர்களும் தொடாந்து பணியாற்றுகின்றனர்.

<table>
<tr><td>1</td><td>பள்ளியின் மொத்த எண்ணிக்கையும் வேலைத்திறனும்</td><td rowspan="9">இந்நகரமன்றத்தின் கட்டுப்பாட்டில் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள் எதுவுமில்லை. அனைத்தும் 01.04.1990 முதல் கல்வித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இத்தலைப்பின் கீழ் குறிப்பேதும் இல்லை.</td></tr>
<tr><td>2</td><td>அலுவலர்கள்</td></tr>
<tr><td>3</td><td>இடவசதியும் மற்றத் தேவைகளும்</td></tr>
<tr><td>4</td><td>தொடக்கக் கல்வி</td></tr>
<tr><td>5</td><td>பள்ளிகளின் எண்ணிக்கை</td></tr>
<tr><td>6</td><td>வேலைத் திறன்</td></tr>
<tr><td>7</td><td>அலுவலர்கள்</td></tr>
<tr><td>8</td><td>இடவசதியும் மற்றத் தேவைகளும்</td></tr>
<tr><td>9</td><td>நிதி</td></tr>
</table>

இந்நகர் எல்லைக்குள் இரண்டு அரசினர் மேநிலைப்பள்ளிகள் உள்ளன. இதில் ஒன்று ஆண்களுக்கென்றும் மற்றொன்று பெண்களுக்கென்றும் நடத்தப்பட்டு வருகிறது. தனியார் உயர்நிலைக் கல்வி வசதி போதுமானது.

## 12. சிறப்புப் பள்ளிகளும், பொது நூலகஙகளும்.

### அ) சிறப்புப் பள்ளிகள்

சிறப்புப் பள்ளிகள் இந்நகரமன்றத்தால் எதுவும் நடத்தப்படவில்லை.

### ஆ) பொது நூலகஙகள்.

அறிக்கையாண்டில் 4 படிப்பகங்ளும் நகராட்சியால் நடத்தப்பட்டது. முக்கியமாக ஆங்கில நாளிதழான இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ் நாளிதழான தினமணி, தினத்தந்தி, மாலைமுரசு, தினமலர் ஆகியவையும் கீழ்கண்ட படிப்பகங்களுக்கு வாங்கி வழங்கப்படுகின்றன. இத்தலைப்பின் கிழ் இவ்வாண்டில் பணியாளர்கள் செலவு உட்பட ரூ.20,000/– செலவு செய்யப்பட்டது.

1) பூபதி படிப்பகம், 2) ஏ.கே.கன்னியப்பன் படிப்பகம், 3) பாலசுந்தரம் படிப்பகம் மற்றும் ஜானகிராமன் படிப்பகம் இவைகளைத் தவிர மாவட்ட நூலக ஆணைக்குழுவின் பராமரிப்பில் மாவட்ட கிளை நூலகம் ஒன்றும் இந்நகரில் இயங்கி வருகிறது.

## 13. போதுமை

கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட ஒரு சித்த மருத்துவமனை 14.04.1963 முதல் திறக்கப்பட்டு அறிக்கையாண்டில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| அ) | சித்த மருத்துவ அலுவலர் | –– | 01 (19.3.2009 முதல் காலி பணியிடம்) |
| ஆ) | மருந்தாளுநர் | –– | 01 |
| இ) | இரவு காவலர் | –– | 01 |
| ஈ) | கட்டுகட்டுபவர் (M.N.H. Male Nursing Assistant | – | – |

## 14. நோயாளிகள்

நோயாளிகளுக்கான செலவுகள் மற்றும் மருத்துவ உதவி இவ்வாண்டில் ரூ.1,50,000/– செலவு செய்யப்பட்டது.

## 15. இடவசதியும் உபகரணங்களும்

அ) இந்நகராட்சியில் சித்த மருத்துவமனை நகராட்சிக்கு இலவசமாக கொடுக்கப்பட்ட இடத்தில் சொந்தக் கட்டிடத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

ஆ) அறிக்கையாண்டில் நகராட்சி சித்த மருத்துவமனையில் மொத்தம் சிகிக்சை பெற்றவர்கள் 9,872 ஆகும். இதில் 3,650 ஆண்களும் 4,021 பெண்களும் 2,201 குழந்தை நோயாளிகளும் சிகிச்சை பெற்றனர். உள்ளூர் நோயாளிகள் 9,621 வெளியூர் நோயாளிகள் 251 பேரும் சிகிச்சை பெற்றனர். போதிய உபகரணங்களையும் அலுவலர்களையும் கொண்டதாக இம்மருத்துவமனை நடத்தப்பட்டு வருகிறது.

## 16. அமைப்பும் ஊழியர்களும்

அறிக்கையாண்டில் 01.04.2017 முதல் 31.03.2018 வரை திரு.சுகவனம் அவர்கள் துப்புரவு அலுவலராகவும் திரு.A.அப்துல் ரஹிம் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரையிலும் துப்புரவு ஆய்வாளர்களாக பணியாற்றி வந்தார்கள்.

## 17. அ) பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்

இவ்வாண்டின் 729 பிறப்புகள் பதிவாகியுள்ளன. சென்ற ஆண்டில் 685 பிறப்புகள் பதிவாகின. பொதுமக்கள் எண்ணிக்கையில் பிறப்பு விகிதம் 1.47 ஆகும்.

மேலும் அறிக்கையாண்டில் 4 குழந்தைகள் இறந்து பிறந்தன. அதில் ஆண்கள் 2, பெண்கள் 1 இறந்து பிறந்த குழந்தைகளின் விகிதம் 1 ஆகும்.

பொது நலத்துறையில் 1 மகப்பேறு உதவியாளர் பணியாற்றி வந்தார். மகப்பேறு உதவியாளர்கள் பொது மக்களின் வீடுகளுக்கு சென்று நகராட்சி தாய்சேய் நல மையத்திற்கு கருவுற்ற தாய்மார்கள் வரவழைக்கப்பட்டு அவர்களின் பிள்ளை பேறுகளை கவனித்துள்ளனர். அறிக்கை ஆண்டில் சம்பளம் உட்பட மொத்தம் இதற்காக செலவு செய்யப்பட்ட தொகை ரூ.5,05,584/–.

### ஆ) பிள்ளைபேறும், தாய் சேய் நலமும்

2017–18–ம் அறிக்கை ஆண்டில் நகராட்சி தாய்சேய்நல மையம் நகராட்சி சொந்தமான கட்டிடத்தில் தொடர்ந்து இயங்கி வருகிறது. மருத்துவ உதவியாளர்கள் அன்று கொண்டுவரப்பட்ட கருவுற்ற தாய்மார்களை ஆயாவின் உதவியைக் கொண்டு கவனித்தார்கள்.

### NHHS

நகராட்சி கட்டுபாட்டில் இருந்த மகபேறு மருத்துவமனை தற்போது துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் கீழ் ஆரம்ப சுகாதாரப் நகர் நல மையமா மாற்றப்பட்டுள்ளது.

## 18. இறப்பு விகிதமும், தொத்து நோய்களும்

1) இவ்வாண்டில் 319 இறப்புகளும் அதற்கு முன்னாண்டில் 305 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இறப்பு விகிதம் இந்நகரில் குடியிருக்கும் மக்கள் தொகையில் 0.56 சதவிகிதமாகும்.

| | | |
|---|---|---|
| 1. காய்ச்சல் (மலேரியா நீங்கலாக) | –– | இல்லை |
| 2. பேதி, சீதபேதி | –– | இல்லை |
| 3. மூச்சுத் திணரல் நோய்கள் | –– | 30 |
| 4. காலரா | –– | இல்லை |
| 5. புற்றுநோய் | –– | இல்லை |
| 6. மாரடைப்பு | –– | 97 |

| | | |
|---|---|---|
| 7. எலும்புருக்கி | -- | இல்லை |
| 8. மற்றவை | -- | 165 |
| **மொத்தம்** | **--** | **292** |

**2. வாந்திபேதி**

இந்நோயினால் அறிக்கையாண்டில் எவரும் பாதிக்கப்படவில்லை.

**3. பெரியம்மை**

இந்நோய் இந்திய நாட்டிலிருந்து அகற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட நோய்த் தடுப்புப்பணி முத்தடுப்பு ஊசி போடும் பணிகள் மற்றும் பிறப்பு, இறப்பு பதியும் பணியினை துப்புரவு ஆய்வர்கள் தொடர்ந்து கவனித்து வருகிறார்கள்.

**4. பிளேக்**

இந்நோயினால் அறிக்கையாண்டில் எவரும் பாதிக்கப்படவில்லை.

**5. மூளைக்காய்ச்சல்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு கிடையாது.

**6. யானைக் கால் நோய்**

அரசினால் அனுமதிக்கப்பட்ட தடுப்புத்திட்டம் இவ்வாண்டு முழுமையும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் நகராட்சி எல்லையை மூன்றாகப் பிரித்து இரண்டு பகுதி தேசிய யான்க்கால் நோத்தடுப்பு பிரிவினர் நேர் பராமரிப்பிலும், ஒரு பகுதி இந்நகராட்சி யானைக்கால் நோய்த்தடுப்பு பராமரிப்பிலும் விடப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் இத்திட்டத்தில் 4 தொழிலாளர்களும் பணி புரிந்தனர். அறிக்கை ஆண்டில் இதற்கான ஊதியம் உட்பட மொத்த செலவு ரூ.18,66,000/-. கொசு உற்பத்தி இடங்களில் பேடெக்ஸ் மருந்து தெளிக்கப்பட்டது.

**7. கொக்கிப்புழு**

அறிக்கையாண்டில் இந்நோயினால் எவரும் அவதியுறவில்லை.

## 19. துணை விதிகள்

திருமண மண்டபஙகள், உணவகஙகள் மற்றும் விடுதிகளில் சேவை கட்டணம் வசூலிக்க துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டது.

## 20. துப்புரவு

(a) பொது துப்புரவு பணியாளர்கள் 121 நபர்களில், துப்புரவு பணியாளர்கள் 61 நபர்களும், (காலிப்பணியிடம்-60), 1-துப்புரவு அலுவலர், 1-துப்புரவு ஆய்வர், 5-துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் ஒரு களப்பணி உதவியாளரும் இப்பிரிவில் பணியாற்றுகிறார்கள். நகராட்சி துப்புரவு பணியாளர்களால் 30 தள்ளு வண்டிகள் மூலம் குப்பை உரம் தயாரிக்கும் இடத்திற்கு கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டன. மினிலாரி-3, அறிக்கையாண்டில் டம்பர் பிளேசர்-1, டிப்பர் ஆட்டோ-3 பராமரிக்கப்பட்டுவருகிறது.

(b) இந்த நகராட்சியின் பராமரிப்பில் 74 (68+6) பேர்கள் உட்காரக்கூடிய 12 பொது மல அறைகள் உள்ளன. மேலும் அறிக்கையாண்டிலிருந்து இந்நகரிலுள்ள மொத்த வீடுகளில் நவீன கட்டணக் கழிப்பிட வசதியுடன் கூடிய மல அறைகள் உள்ளது. பேருந்து நிலையத்தில் ஒரு நவீன கட்டணக் கழிப்பிடம் இலாகா மூலம் சுங்கம் வசூல் செய்யப்பட்டுவருகிறது.

(d) 2700 கடைக் கட்டிடங்கள், குடிசைகள் உட்பட 13654 கட்டிடங்களும் இருந்தன. மல அறைகள் இல்லாத கட்டிடங்கள் எதுவும் இல்லை. மக்கள் தொகை நெருக்கம் ஒரு வீட்டிற்கு 5 நபர்கள் என இருந்தது.

(e) இந்நகரில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு மூலம் 26 மெட்ரிக் டன் குப்பைகள் தினசரி சேகரிக்கப்பட்டு நகராட்சி உரக்கிடஙகில் சேகரிக்கப்படுகிறது. ஆண்டிற்கு உத்தேசமாக 422 மெட்ரிக் டன்கள் கலவை உரக்கிடஙகிற்கு குவிக்கப்பட்டுள்ளது.

**<u>ஆ) உணவு பொருட்கள் கலப்படம்</u>**

உரிமையாணை வழங்கியபோது கொடுக்கப்பட்ட நிபந்தனைகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன. அறிக்கையாண்டில் உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் உணவு பொருட்கள் கலப்படம் தமிழக அரசாணையில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு நிர்வாகத்தின் வசம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**<u>இ) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்</u>**

அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமம் வழங்குவது வாயிலாக நிபந்தனைகள் நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக ஒழுங்கு செய்யப்பட்டு வந்தன. அறிக்கையாண்டில் இதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டு அதன் வாயிலாக ரூ.1,43,760/– வருவாய் பெறப்பட்டது.

**<u>ஈ) சந்தைகளும் திருவிழாக்களும்</u>**

ஆற்காடு நகரம் திருவிழா நடக்குமிடமாக அறிவிக்கப்படவில்லை. அறிக்கையாண்டில் சிறப்பான சந்தைகளோ, திருவிழாக்களோ நகரில் நடைபெறவில்லை.

## <u>21. நீர் வளம்</u>

(a)அறிக்கையாண்டில் நகராட்சி பொதுமக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழஙகுதல் தங்குதடையின்றி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(b)இந்நகருக்கு குடிநீர் பாதுகாக்கப்பட்ட குழாய் வாயிலாக வழங்கப்படுகிறது. பாலாற்றிலுள்ள வடிகிணற்றிலிருந்து குடிநீர் உறிஞ்சப்பட்டு குடிநீர் கொடுக்கப்பட்டு வந்தது. அறிக்கையாண்டில் 199 பொது குடிநீர் குழாய்கள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இவற்றில் 3 இடங்களில் இரட்டைக் குழாய்கள் உள்ளன.

(c) தலைமை நீரேற்று நிலையத்தில் குளோரினேஷன் செய்யப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழஙக அறிக்கையாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.67,85,384/– செலவானது. சாதாரண வரவு ரூ.1,03,36,766/– ஆகும்.

(d) இந்நகருக்கு பொது குடிநீர் குழாய்களின் வாயிலாகவும், வீட்டு குழாய்களின் வாயிலாகவும் வழஙகப்பட்ட குடிநீரின் மொத்தக் கொள்ளளவு ஒரு நாளைக்கு சராசரி 54.80 இலட்சம் லிட்டர்கள் ஆகும். ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 98 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(e) அறிக்கையாண்டில் 194 குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. மொத்த குடிநீர் குழாய் இணைப்புகள் மொத்தம் 7100 ஆகும். குடிநீர் வழங்கலுக்காக துணை விதிகள் பின்பற்றப்படுகின்றன. ஆண்டு இறுதியில் அளவுமானி பொருத்தப்பட்ட குடிநீர் இணைப்புகள் 5800 இருந்தது, 1300 அளவுமானிகள் பொருத்தப்படாதவையாக இருந்தது. அறிக்கையாண்டில் வழங்கப்பட்ட புதிய குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை கீழ்கண்டவாறு வசூலிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | வீட்டுக் குழாய் இணைப்பு ஒன்றுக்கு | ரூ.5,000/– |
| 2) | வீட்டு உபயோகமல்லாத குழாய் இணைப்பு ஒன்றுக்கு | ரூ.10,000/– |
| 3) | வியாபார நிறுவனத்திற்கு குழாய் இணைப்பு ஒன்றுக்கு | ரூ.25,000/– |

(f) தற்போது நகரில் 187 துளைகிணறுடன் கூடிய கைப்பம்புகளும் மினி பவர் பம்ப்களும் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு தொடர்ந்து இந்நகராட்சியால் பேணப்பட்டு வருகிறது. வேப்பூரிலுள்ள தலைமை நீரேற்று நிலைய உயர் மின்அழுத்த இணைப்புக்கான மின் கட்டண நிலுவை ரூ.67,96,721/– தமிழ்நாடு மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

## 22. 2017–2018-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணி விவரங்கள்

### (1) பொது நிதி

2017–18 அறிக்கை ஆண்டில் பொது நிதி திட்டத்தின் கீழ் ரூ.54.90 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.54.90 இலட்சம் செலவினத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | வேலை விவரம் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | செலவுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண்.19, பையோகேஸ் பிளாண்ட் ஆண்டு பராமரிப்பு பணி. | 5.75 | 5.75 |
| 2. | வார்டு எண்.19, பையோகேஸ் பிளாண்ட்–ஐ சுற்றி கூடுதல் தெருவிளக்குகள் பொருத்துதல் பணி. | 15.00 | 5.00 |
| 3. | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தானியங்கி டைமர் சுவிட்ச் பொருத்துதல் பணி. | 1.80 | 1.80 |
| 4. | நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பீரோ சப்ளை செய்தல் பணி. | 1.00 | 1.00 |
| 5. | வார்டு எண்.4 (ம) 9ல் உள்ள பழைய துப்புரவு குடியிருப்புகள் இடித்து அப்புறப்படுத்துதல் பணி. | 1.50 | 1.50 |
| 6. | வார்டு எண்.3. திரு.வ.க தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி. | 5.00 | 5.00 |
| 7. | அம்மா உணவகத்தில் உள்ள மின்சாதன பொருட்கள் ஆண்டு பழுது பராமரிப்பு பணி. | 1.00 | 1.00 |
| 8 | வார்டு எண்.3, பாரதிதாசன் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி. | 4.10 | 4.10 |
| 9 | வார்டு எண்.4, தினசரி மார்க்கெட் அருகில் உள்ள பொதுகழிப்பிடம் பழுது பராமரிப்பு பணி. | 5.00 | 5.00 |
| 10 | கண்ணன் பூங்காவில் சுற்றி சுற்றுச்சுவர் கட்டுதல் பணி. | 2.00 | 2.00 |
| 11 | பேருந்து நிலையத்தில் உள்ள உயர்கோபுர மின் விளக்கு பழுது பராமரிப்பு பணி. | 7.00 | 7.00 |
| 12 | வார்டு எண்.13, போலிஸ்லைன் தெருவில் தார்சாலை அமைத்தல் பணி | 4.50 | 4.50 |
| 13 | அண்ணாநகர் 2வது தெருவில் புதிதாக சிறுபாலம் அமைத்தல் பணி | 0.60 | 0.60 |
| 14 | நகராட்சி பொலிரோ ஈப்பு வாகனத்தில் குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல் பணி. | 0.65 | 0.65 |
| | மொத்தம் | 54.90 | 54.90 |

(2) குடிநீர் வடிகால் நிதி

2017–18 அறிக்கை ஆண்டில் குடிநீர் வடிகால் நிதி திட்டத்தின் கீழ் ரூ.67.85 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.67.85 இலட்சம் செலவினத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | வேலை விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | செலவுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள மினிபவர் பம்பு பழுது பராமரிப்பு பணி. | 5.00 | 5.00 |
| 2. | நகராட்சிக்குட்பட்ட பாலாறு ரயில்வே பாலம் அருகில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி. | 1.80 | 1.80 |
| 3. | வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பைப்லைன் பழுது ஆண்டு பராமரிப்பு பணி (2017–18– | 9.60 | 9.60 |
| 4. | குடிநீர் விநியோகத்திற்காக நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வால்வு பிட் பொருத்துதல் பணி. | 1.00 | 1.00 |
| 5. | தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதிய சப்லமர்சிபஸ் மோட்டார் சப்ளை செய்தல் பணி. | 4.50 | 4.50 |
| 6. | இந்நகராட்சிக்குட்பட்ட போலிஸ் லைன் தெரு, ஈஸ்வரன் கோயில் தெரு, பெரிய அசன்புரா தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பழுது பராமரிப்பு பணி. | 1.20 | 1.20 |
| 7. | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள பைப்லைன் ஆண்டு பழுது பராமரிப்பு பணி. | 9.80 | 9.80 |
| 8. | நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள மினிபவர் பம்ப்க்கான ஆண்டு பழுது பராமரிப்பு. | 9.90 | 9.90 |
| 9 | வார்டு எண்.10 மேனேஜர் தெருவில் பைப்லைன் அமைத்தல் பணி. | 1.10 | 1.10 |
| 10 | வார்டு எண். 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள கைபம்புகள் ஆண்டு பழுது பராமரிப்பு பணி. | 2.00 | 2.00 |
| 11 | வார்டு எண்.5 சந்தாப்பேட்டை தெருவில் புதிதாக பைப்லைன் அமைத்தல் பணி. | 0.45 | 0.45 |
| 12 | குடிநீர் | 1.00 | 1.00 |
| 13 | வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக கிணறு அமைத்தல் பணி. | 10.00 | 10.00 |
| 14 | நகராட்சிக்குட்பட்ட 70 அடி சாலையில் புதிதாக பைப்லைன் அமைத்தல் பணி. | 10.00 | 10.00 |
| 15 | நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள சின்டெக்ஸ் பேடங்குகளில் நகரமன்ற உறுப்பினர், தலைவர் சின்டெக்ஸ் டேங்குகளில், நகரமன்ற உறுப்பினர், தலைவர் பெயர்கள் எழுதுதல் பணி. | 1.50 | 1.50 |
| 16 | வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் பைப்லைன் பழுது பார்த்தல் ஆண்டு பராமரிப்பு பணி. | 5.00 | 5.00 |

| | | | |
|---|---|---|---|
| 17 | தலைமை நீரேற்று நிலையத்தில் 30 H.P. மோட்டார் சப்ளை செய்து பொருத்துதல் பணி. | 1.25 | 1.25 |
| 18 | வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள கைபம்புகள் பழுது பார்த்தல் ஆண்டு பராமரிப்பு பணி | 1.50 | 1.50 |
| 19 | வார்டு எண்.18 வேலூர் மெயின்ரோடு தெருவில் புதிதாக மினிபவர் பம்ப் அமைத்தல் பணி. | 1.50 | 1.50 |
| 20 | வார்டு எண்.2, 5, 9,15, 21, 23,24 (ம) 29ல் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிதாக சின்டெக்ஸ் டேங்க், மினிபவர் பம்ப் பொருத்துதல் பணி. | 5.20 | 5.20 |
| 21 | வார்டு எண்.4ல் பருவதராஜன் தெருவில் மினிபவர் பம்ப், சின்டெக்ஸ் டேங்க் பொருத்துதல் பணி. | 1.50 | 1.50 |
| 22 | தலைமை நீரேற்று நிலையத்தில் 75 HP மோட்டார் காயில் கட்டுதல் பணி | 1.60 | 1.60 |
| 23 | வார்டு 1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள மினிபவர் பம்ப் பழுது பார்த்தல் ஆண்டு பராமரிப்பு பணி | 5.00 | 5.00 |
| 24 | வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பம்பிங் மெயின் பிரதான குழாய்கள் பழுது பார்த்தல் ஆண்டு பராமரிப்பு பணி. | 5.00 | 5.00 |
| 25 | வார்டு எண்.3,8,19ல் ஜெயம் நகர், தேவிநகர், அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக மெயின் பைப்புகள் இணைப்பு ஏற்படுத்துதல் பணி. | 1.80 | 1.79 |
| | **மொத்தம்** | **87.12** | **84.85** |

**(3) கல்வி நிதி**

2016–17 அறிக்கை ஆண்டில் கல்விநிதி திட்டத்தின் கீழ் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.38.42 இலட்சம் செலவினத்தில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | வேலை விவரம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் | செலவுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | வார்டு எண். 30, கிளைவ்பஜார் நடுநிலைப்பள்ளியில் பழுது பராமரிப்பு பணி | 5.00 | 5.00 |
| 2 | நகராட்சி அலுவலக வளாகத்தில் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி. | 5.00 | 5.00 |
| 3 | நகராட்சிக்குட்பட்ட தோப்புகானா தெற்குப்பள்ளியில் டைல்ஸ், பேவர் பிளாக் பதித்தல் பணி | 2.00 | 2.00 |
| 4 | வார்டு எண்.24, 25, தோப்புகானா தெற்கு மற்றும் வடக்குப் பள்ளியில் சோலார் பவர் பிளாண்ட் பொருத்துதல் பணி. | 10.00 | 9.95 |
| 5 | வார்டு 2, ஏ.கே. கன்னியப்பன் படிப்பகத்தில் உள்ள அங்கன்வாடி மையம் பழுது பராமரிப்பு பணி. | 5.00 | 5.00 |
| 6 | தோப்புகானா தெற்கு பள்ளியில் கலர் பூசுதல் பணி | 2.00 | 2.00 |
| 7 | நகராட்சிக்குட்பட்ட தோப்புகானா தெற்குப் பள்ளி.ல் | 2.00 | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| | கழிவறை கட்டுதல் பணி. | | |
| 8 | வார்டு 24, நகராட்சி தெற்கு உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி | 10.00 | 10.00 |
| | **மொத்தம்** | **41.00** | **38.42** |

<u>**திட்டப்பணிகள்**</u>

(4) **2017–18** அறிக்கை ஆண்டில் SBM **2015–16** திட்டத்தின் கீழ் ரூ.**10.00** லட்சம் செலவினத்தில் வார்டு எண்.**9**, ஏரிக்கரை தெருவில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(5) 2017–18** அறிக்கை ஆண்டில் (SRP 2015-**2016**) திட்டத்தின் கீழ் ரூ.**300.00** லட்சம் செலவினத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலைகள், சிமெண்ட் சாலைகள், மழைநீர், கால்வாய்கள், சிறுபாலங்கள் அமைக்கும் பணி.

**(6) 2017–18** அறிக்கை ஆண்டில் ( SSS – 2016-**2017** ) திட்டத்தின் கீழ் ரூ.**30.00** லட்சம் செலவினத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை குப்பைகள் சேகரித்திட Smart deep collection bin சப்ளை செய்து பொருத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(7) 2017–18** அறிக்கை ஆண்டில் (MP Fund 2016-2017) திட்டத்தின் கீழ் ரூ.**15.00** லட்சம் செலவினத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை குப்பைகள் சேகரித்திட Smart deep collection bins சப்ளை செய்து பொருத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(8) 2017–18** அறிக்கை ஆண்டில் (park and play fields funds **2016–17**) திட்டத்தின் கீழ் ரூ.**20.00** லட்சம் செலவினத்தில் K.M.L. பூஙகா, மற்றும் ஏ,கே.கன்னியப்பன் பூஙகாவில் விளையாட்டு உபகரணஙகள், பூஙகா மேம்படுத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(9) 2017–18** அறிக்கை ஆண்டில் (மணல்குவாரி ஏலத்தொகை **2011–2012** மற்றும் 2012-13) திட்டத்தின் கீழ் ரூ. **21.00** லட்சம் செலவினத்தில் வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக கிணறு கட்டுதல், கேபிள் லைன் அமைத்தல், மோட்டார்கள் சப்ளை செய்தல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(10) 2017–18** அறிக்கை ஆண்டில் (SSS 2016-17) திட்டத்தின் கீழ் ரூ.**30.00** லட்சம் செலவினத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை குப்பைகளை சேகரித்திட smart deep collection Bins சப்ளை செய்து பொருத்துதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

**(11) 2017–18** அறிக்கை ஆண்டில் (MLA Fund 2016-17) திட்டத்தின் கீழ் ரூ.**60.00** லட்சம் செலவினத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை குப்பைகளை சேகரித்திட smart deep collection bins சப்ளை செய்து பொருத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(12)** **2017–18** அறிக்கை ஆண்டில் (MP Fund) **2016-2017** திட்டத்தின் கீழ். ரூ.**6.50** லட்சம் செலவினத்தில் பேருந்து நிலையத்தில் உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(13)** **2017-2018** அறிக்கை ஆண்டில் (SSS 2016-2017)- திட்டத்தின் கீழ் ரூ.**11.00** லட்சம் செலவினத்தில் நகராட்சிக்குட்பட்ட KML பூஙகாவில் விளையாட்டு உபகரணஙகள் சப்ளை செய்தல் மேம்படுத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**(14)** **2017-2018** அறிக்கை ஆண்டில் (SSS 2016-2017 ) திட்டத்தின் கீழ் ரூ.**5.00** லட்சம் செலவினத்தில் வார்டு **29** ல் வேல்முருகேசன் தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டது.

## 23. பொது சுகாதாரமும் பாதுகாப்பும்

ஆற்காடு நகர எல்லைக்குள் தீயணைப்பு நிலையம் ஏதும் இல்லை.

## 24. லாபம் தரக்கூடிய வருவாய்கள்

இவ்வாண்டில் இத்தலைப்பின் கீழ் மொத்த கடைகள் கட்டிடஙகள் மற்றும் நிலஙகள் வாயிலாக கேட்பு ரூ **106.81** இலட்சம் ஆகும். இதில் வரவு ரூ.**85.23** இலட்சம் சென்ற ஆண்டு கேட்பு ரூ.**100.95** இலட்சம் ஆகவும் வரவு ரூ.**92.09** இலட்சம் ஆகவும் இருந்தன.

## 25. போக்குவரத்து

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகமும் மற்றும் தனியார் நிறுவனஙகளும் போக்குவரத்துக்களை மேற்கொண்டுள்ளனர். இந்நகராட்சியால் பேருந்துகள் எதுவும் நடத்தப்படவில்லை.

## 26. சந்தைகள், வண்டிமேடு, ஆடு அறுக்கும் தொட்டி தனியார் ஆகிய இனஙகள்

சந்தைகள், வண்டிமேடு, ஆடு அறுக்கும் தொட்டி தனியார் ஆகிய இனங்கள் வாயிலாக அறிக்கையாண்டில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சிக்கு வருவாய் வந்துள்ளது.

| ஆண்டு | தினசரி சந்தை | வண்டி மேடு | பாரஉந்துகள் | ஆட்டுத் தொட்டி |
|---|---|---|---|---|
| 2017– 2018 | 9,20,588/– | – | – | 5,48,163/– |

### அ) தினசரி சந்தை

அறிக்கையாண்டில் ஒரே ஒரு நாளங்காடி மட்டும் தொடர்ந்து இந்நகராட்சியால் பேணப்பட்டு வந்தது. நாள்தோறும் சந்தையின் கட்டணத் தொகை வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் ரூ.**9,20,588/–**க்கு விடப்பட்டது. வாரச்சந்தை எதுவும் அறிக்கை ஆண்டில் நடத்தப்படவில்லை. நாளங்காடிக்கும், வண்டிமேடும், கட்டிடங்களுக்கும், பேருந்து நிலையத்திற்கும் அறிக்கையாண்டில் தேவையான பழுதுபார்க்கும் பணிகள் செய்யப்பட்து. இந்நகராட்சி எல்லைக்குள் தனியார் சந்தைகள் ஏதும் கிடையாது.

### ஆ) வண்டி மேடுகள்

இந்நகராட்சியால் ஒரு வண்டிமேடு மட்டும் பேணப்பட்டு வருகிறது. மொத்த வசூல் ரூ.**3,20,240/–** இந்நகரில் தனிப்பட்டவர்களின் வண்டிமேடு எதுவும் இல்லை.

### இ) பேருந்து நிலையம்

இந்நகராட்சி அறிக்கையாண்டில் ஒரு பேருந்து நிலையத்தைப் பேணி வந்தது. இப்பேருந்து நிலையம் 18.07.1966ம் நாளிட்ட தமிழ்நாடு அரசு உள்துறை அரசாணை (நிலை) எண்.2356ன் படி பி பிரிவின் கீழ் இயங்கி வருகிறது. பேருந்து நிலையத்திற்கு வரும் ஒவ்வொரு பேருந்துக்கும் ரூ.12/– வீதம் 01.04.2007 முதல் சுங்கம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக அறிக்கையாண்டில் வருவாய் ரூ.8,62,154/–ஆகும். இந்நகராட்சியில் பேருந்து நிலையத்தின் வாயிலாக நாள்தோறும் சுமார் 310 பேருந்துகள் செல்கின்றன. இதில் குடிநீர் வசதி, சிறுநீர் கழிப்பறைகள், மலம் கழிக்கும் அறைகள், பிளாட்பாரம், பயணிகள் தங்கும் இடம், உணவு விடுதிகள், கடைகள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பேருந்துகள் புறப்படும் காலத்தை ஒலிபெருக்கியால் விளம்பரப் படுத்துதல் வர்த்தக விளம்பரம் செய்வதன் மூலம் கட்டணம் வசூலிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டு ரூ.1,48,018/– வருவாய் பெறப்பட்டது.

### ஈ) ஆடு அறுக்கும் தொட்டி

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ஒரு ஆடு அறுக்கும் தொட்டி பேணப்பட்டு வந்தது. ஆடு அறுக்கும் தொட்டி வாயிலாக ரூ.5,48,163/– வருவாய் இந்நகராட்சிக்கு கிடைக்கப் பெற்றது. இவ்வாண்டில் செலவு ஏதும் செய்யப்படவில்லை. இந்நகரில் தனிப்பட்டவரின் ஆடு அறுக்கும் தொட்டி எதுவும் கிடையாது.

### உ) இயந்திர நிறுவனஙகளும், தொழிற்சாலைகளும்

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 249ன்கீழ் அனுமதிகள் புதுப்பிக்கப்பட்டும், பிரிவு 250ன் கீழ் உரிமையாணைகள் வழங்கப்பட்டும் அவைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### 27. இதர இலாபம் வரக்கூடிய இனஙகள்

அறிக்கை ஆண்டில் இதர இலாபம் வரக்கூடிய இனஙகள் ஏதுமில்லை

## 28. வரவு கணக்குகள்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட அடிப்படையில் சொத்து வரி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்பிரிவு 81ன்படி சொத்துவரி விகிதம் நடைமுறைப்படுத்தப்பட்டன.

பிரிவு 81(எ) 2(2) கீழ் வீட்டுவரியில் அடங்கியுள்ள வரிவிகிதங்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பொதுக்காரியங்களுக்கு வரி ஆண்டிற்கு | –– 9% |
| நீரளிப்பு மற்றும் சாக்கடை வரி | –– 8% |
| விளக்கு வரி | –– 4% |
| கக்கூஸ் வரி | –– 2% |
| கல்வி வரி | –– 5% |
| மொத்தம் | –– 28% |

அறிக்கையாண்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் வரி சீராய்வுப் பணி நடைபெற்று 01.04.2008 முதல் வரி திருத்தம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது.

1. 82(3) பிரிவின்படி கீழ் உள்ள காலிமனை வரியில் அடங்கியுள்ள 01.04.87 முதல் விதிக்கப்படவுள்ள விதிககள அரையாண்டு விகிதம் 320 சதுர கெஜத்திற்கும் (அ)

அதனை பாகத்திற்கும் ரூ.7.50 வீதம் வரி விதிக்கப்படும். இதை கீழ்கண்டவாறு பகிர்ந்துக் கொள்ளப்படும்.

2. அரசாணை எண் 151 நாள் 20.08.2009 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை ஆணையின் படி காலிமனை வரி விதிப்பு சதுர அடி முறையில் 01.10.2009 முதல் வரிவிதிப்பு மேற்கொள்ள நகரமன்ற தீர்மானம் எண் 514 நாள் 31.08.2009 – ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளவாறு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

அ) குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்கள் : 0.30 பைசா
ஆ) முக்கிய சாலை மற்றும் பேருந்துகள் செல்லும் சாலைகள் : 0.40 பைசா
இ) சிறப்பு வாய்ந்த சாலை மற்றும் மெயின் ரோடு : 0.50 பைசா

பொதுக்காரியங்களுக்கு -- 1%
நீரளிப்பு சாக்கடை -- 2%
கல்வி -- 1%
துப்புரவு -- 1/2%
விளக்கு -- 1/2%

**1) பிரிவு 83(4)ன் கீழ் விவசாய நிலங்களுக்கு வரி**

1920ம் ஆண்டின் தமிழ்நாடு நகராட்சிகளின் திருத்தச் சட்டம் (எண்.59/1998 பிரிவு 124–டி உட்பிரிவு (2)ன்படி தொழில்வரி விதிப்பதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டமைப்புகளின் அடிப்படையில் சட்ட உட்பிரிவு 13 மற்றும் 1998ம் ஆண்டின் தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொழில்வரி விதி 16ன்படி 01.10.2008 முதல் துவஙகி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி விகிதம் (Rate of Tax) ஏற்கனவே நிர்ணயித்த வரி விகிதங்களுக்கு 25% குறையாமலும் 35% க்கு மிகாமலும் உயர்த்தப்படவேண்டும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஆற்காடு நகரமன்றம் தனது 27.09.2013ம் தேதிய 308 எண்ணுள்ள தீர்மானத்தில் திருத்தியமைத்த தொழில்வரி விகிதங்களை ஊர்ஜிதம் செய்து அங்கீகரித்துள்ளமையால் 01.10.2013ம் தேதி முதல் துவங்கும் அரையாண்டு முதற்கொண்டு பிரதி அரையாண்டிற்கும் இந்நகராட்சிக்குட்பட்ட தொழில்கள், வர்த்தகம், அழைத்தல் மற்றும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றிற்கான தொழில்வரி கீழ்கண்டவாறு விதித்து வசூலிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | அரையாண்டு தொழில்வரி |
|---|---|---|
| 1 | ரூ.21,000/– வரை வரி இல்லை | 0 |
| 2 | ரூ.21,001/– முதல் ரூ.30,000/– வரை | ரூ.118/– |
| 3 | ரூ.30,001/– முதல் ரூ.45,000/– வரை | ரூ.298– |
| 4 | ரூ.45,001/– முதல் ரூ.60,000/– வரை | ரூ.586/– |
| 5 | ரூ.60,001/– முதல் ரூ.75,000/– வரை | ரூ.883/– |
| 6 | ரூ.75,001/– முதல் அதற்கு மேல் | ரூ.1173/– |

தொழில்வரி நிர்ணயம் குறித்த முந்தைய எல்லா விளம்பரஙகளையும் ரத்து செய்வதோடு 01.10.2013ம் தேதி முதற்கொண்டு மறு அறிவிப்பு செய்யப்படும் வரை அமுலில் இருக்கும்.

## 29. வரி விதிப்பு

**இவ்வாண்டிலுள்ள வரி விதிப்பின் விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | எல்லா வரியையும் சேர்த்து சராசரி ஒவ்வொரு நபருக்கும் ஏற்பட்ட வரி விதிப்பு (சொத்துவரி) மற்றும் தொழில்வரி உட்பட | 504 |
| 2 | சொத்து வரியில் ஒவ்வொரு சொத்திற்கும் ஏற்படும் வரி விதிப்பு | 231 |
| 3 | வரி விதிக்கப்பட்டவர்களின் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் தொழில்வரி விதிப்பு | 39 |

| | | |
|---|---|---|
| 4 | மொத்த வருமானத்தில் சர்க்கார் மான்யங்கள் தவிர்த்து ஒவ்வொருவரால் கிடைக்கப் பெறும் வருமானம் | 481 |
| 5 | சர்க்கார் மானயங்கள் உட்பட மொத்த வருமானத்தில் ஒவ்வொருவரால் கிடைக்கப் பெறும் வருமானம் | 1921 |

## 30. கேட்பு, வசூல், நிலுவை விவரம்

எல்லா வரி மற்றும் வரியில்லா இனங்கள் சேர்த்து இவ்வாண்டிற்கு வசூலாக வேண்டிய மொத்த கேட்புத் தொகை ரூ.539.11 இலட்சம் சென்ற ஆண்டில் இத்தொகை ரூ.456.99/– இலட்சம் ஆக இருந்தது. வரி மற்றும் வரியில்லா இனங்களும் சேர்ந்து 31.03.2018 நாளன்று ரூ.539.11/– இலட்சம் ஆகும். கடந்த ஆண்டு நிலுவை ரூ.67.47/– இலட்சம் ஆக இருந்தது. 31.03.2018 நாள் அன்று நிலுவையில் உள்ள வரித் தொகையின் விவரம் பின்வருமாறு.

**வரியினஙகள்.**

சொத்து வரி – ரூ.178.06 இலட்சம்

காலிமனை வரி- ரூ.17.07 இலட்சம்

தொழில் வரி – ரூ.23.51 இலட்சம்

**வரி அல்லாத இனஙகள்**

குடிநீர் கட்டணம் – ரூ.54.02 இலட்சம்

கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனஙகள் – 97.95 இலட்சம்

மொத்தம் – **ரூ.370.61 இலட்சம்**

**இவ்வாண்டு வரி வசூல் செய்த சதவிகிதம் பின்வருமாறு**

| வரி வகை | நிலுவை | நடைமுறை | மொத்தம் |
|---|---|---|---|
| 1) வரி இனம் | 45.59% | 85.04% | 78.11% |
| 2)வரியில்லா இனம் | 64.22 % | 94.32% | 91.22% |

## 31. நிதி நிலைமை

அறிக்கையாண்டில் வரவு, செலவு முறையே ரூ. 1709.28 லட்சஙகள் மற்றும் ரூ.1784.13 லட்சஙகள் ஆகும். அறிக்கையாண்டில் ஆரம்ப இருப்பு ரூ.408.59 லட்சஙகள் மற்றும் முடிவு இருப்பு ரூ.207.95 இலட்சஙகள் ஆகும்.

## 32. சாதாரண வரவினஙகள்

அறிக்கையாண்டில் பொதுக்கணக்கின்கீழ் ரூ.1784.13 லட்சஙகள் செலவாயிற்று. 2017–18ம் ஆண்டில் அரசு நிதியிலிருந்து கீழ்கண்ட மான்யஙகள் பெறப்பட்டன.

1. மாநில நிதி ஆணைக்குழு மான்யம் –– ரூ. 506.04 இலட்சம்
2. யானைக்கால் ஒழிப்பு திட்ட மான்யம் –– –
3. தேசிய குடிசைப்பகுதி மேம்பாடு மான்யம் –– –
4. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட மான்யம் –– -
5. பாராளுமன்ற உறுப்பினர் திட்டம் –– –
6. தன்னிறைவு திட்டம் 2016–17 –– ரூ.6.00 இலட்சம்
7. அடிப்படை வசதிகள் திட்ட மான்யம் –– ––
8. ஈமச்சடஙகு மான்யம் –– ரூ. 60,000/–
9. சுவர்ணஜெயந்தி திட்டம் –– --
10. Operation & Maintenance Gap filling Fund –– --

11. 13 வது நிதிக்குழு மான்யம் Special Road works —— ரூ.13.00 இலட்சம்.
12. பிளாஸ்டிக் சாலை திட்டம் —— --
13. நகர்ப்புற ஒருஙகிணைந்த அபிவிருத்தி திட்டம் (IUDM) —— -
14. திறந்தவெளி கழிப்பிடத்தினை அறவே ஒழிக்கும் திட்டம் —— ரூ. 41.80 இலட்சம்.
15.SWM -- ரூ.7.77 இலட்சம்.
16.DROUGHT - ரூ.4.50 இலட்சம்.
17 Traffice Management Fund - ரூ.18.75 இலட்சம்.
18 Infra gap filling - ரூ.75.00 இலட்சம்

## 33. கடன்கள்

அறிக்கையாண்டில் ஆரம்பத்திலும், கடைசியிலும் நிலுவையாக இருந்த கடன் தொகைகளும் கொடுக்கப்பட்ட வட்டித் தொகைகளும் கீழ்கண்டவாறு இருந்தன.

| வ. எண் | கணக்குகளின் தலைப்பு | அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் இருந்து நிலுவை | அறிக்கை ஆண்டில் ஏற்பட்டது | அறிக்கை ஆண்டில் திருப்பிக் கொடுத்தது | அறிக்கை ஆண்டில் இறுதியில் உள்ள நிலுவை | அறிக்கை ஆண்டில் செலுத்த பட்ட வட்டி |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொது (அரசு கடன்) | – | – | – | – | – |
| 2 | டுபிட்கோ | 6,04,483 | 19,76,735 | 19,76,735 | 6,04,483 | – |
| 3 | நீரளிப்பு | – | – | – | – | – |
| 4 | IUDP/ IDSMT | 6,82,896 | – | -- | 682896 | – |
| 5 | MUDF | | | | | |

## 34. முதலீடுகள்

இரண்டு கோடி தொன்னூற்று மூன்று இலட்சம் அளவில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## 35. தணிக்கைத் தடைகள்

2017–2018–ம் ஆண்டின் இறுதிவரை தணிக்கை ஆட்சேபணைகள் கீழ்கண்டவாறு நிலுவையாக உள்ளது.

| வ. எண். | வருடம் | தணிக்கைத் தடை விவரம் | நிலுவை பத்தி எண்கள் | தொகை ரூ(லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 1990–91 | பொது | 1 | –– |
| 2 | 1991–92 | பொது | 1 | –– |
| 3 | 1993–94 | பொது | 1 | –– |
| 4 | 1995–96 | பொது | 1 | –– |
| 5 | 1996–97 | பொது | 1 | - |
| 6 | 1997–98 | பொது | 2 | 54,98 |
| 7 | 1998–99 | பொது | 1 | 0.08 |
| 8 | 1999–00 | பொது | 17 | 25,51 |
| 9 | 2000–01 | பொது | 1 | 0,41 |
| 10 | 2001–02 | பொது | 13 | 33,89 |
| 11 | 2002–03 | பொது | 10 | 2.13 |
| 12 | 2003–04 | பொது | 20 | 121.01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | 2004–05 | பொது | 38 | 52.36 |
| 14 | 2005–06 | பொது | 3 | 20.81 |
| 15 | 2006–07 | பொது | 5 | 40.56 |
| 16 | 2007–08 | பொது | 10 | 61.56 |
| 17 | 2008–09 | பொது | 10 | 17.06 |
| 18 | 2009–10 | பொது (ம) குடிநீர் | 15 | 152.76 |
| 19 | 2010-2011 | பொது | 45 | 121.65 |
| 20 | 2011-2012 | பொது | 20 | 90.38 |
| 21 | 2012-2013 | பொது | 40 | 142.24 |
| 22 | 2013-2014 | பொது (ம) குடிநீர் | 20 | 23.45 |
| 23 | 2014-2015 | பொது (ம) குடிநீர் | 55 | 102.56 |
| 24 | 2015-2016 | பொது (ம) குடிநீர் | 55 | 151.02 |
| 25 | 2016-2017 | பொது (ம) குடிநீர் | 40 | 78.02 |
| 26 | 2017-2018 | பொது (ம) குடிநீர் | 40 | 56.04 |
| | மொத்தம் | | 465 | 1348.48 |

## 36. வழக்குகள்

1. 31.03.2018–ம் நாளன்று முடிவுறாமல் இருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை–08.
2. 2017–2018–ம் ஆண்டில் முதன் முறையாக கொடுக்கப்பட்ட வழக்குகள்–0.
3. 2017–2018–ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகள் – 0.
4. 2017–2018–ம் ஆண்டின் முடிவில் இருக்கும் வழக்குகள் – 0.
5. 2017–2018–ம் ஆண்டின் முடிவில் இருக்கும் வழக்குகளின் மொத்த எண்ணிக்கை–08.

இவ்வாண்டின் வழக்குகளின் வாயிலாக ஏதும் பெறப்படவில்லை. வழக்கு முடிவு பெறாததால் அறிக்கை ஆண்டில் வரவு ஏதும் இல்லை

## 37. பொதுக் குறிப்புகள்

இந்நகராட்சியில் பொது மக்கள் நலம் மற்றும் சாதாரண வருவாயுள்ள மக்களின் வரிச்சுமையையும் கருத்திற்கொண்டு நகராட்சி வ்ருவாயைப் பெருக்கத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. நகரத்தின் குழாய்கள் அமைத்தல் போன்ற இன்றியமையாத் திட்டம் பணிகளை அவ்வப்போது செய்து முடித்துள்ளது.

## 38. குடும்ப நலத் திட்டம்

குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமான தாய்சேய்நல விடுதியில் பணிபுரியும் மகப்பேறு உதவியாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் சுகாதார உதவியாளர் முதலியோர்களால் பிரச்சாரம் செய்து வரப்பட்டது. கருத்தடை அறுவை சிகிச்சை சம்பந்தமான ஒதுக்கப்பட்ட இலக்கீடுகள் அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 39. சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

ஆற்காடு நகராட்சியில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த நேரு வேலை வாய்ப்புத் திட்டம் (NRY) மற்றும் பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் அனைத்தும் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டமாகிய சுவர்ணஜெயந்தி சகாரிரோஜ்கார் யோஜனா திட்டத்தின் கீழ் 01.12.1997 முதல் செயல்படுத்தப்பட வேண்டும்

என்று நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 25.09.1997ம் தேதிய நே.மு.க.எண்.12567/97/யுபிற கடிதம் மற்றும் வழிமுறைகளின்படி மன்றம் தனது தீர்மான எண்.230, நாள்–23.10.1997ல் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டம் இரண்டு வகையான செயல்பாடுகளால் உள்ளடங்கியது. அவையாவன.

1. நகர்ப்புற சுயவேலை வாய்ப்புத் திட்டம் (USEP)
2. நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் (UWEP)

இத்திட்டம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நே.மு.க.எண். 73744/97/யுபி2, நாள்–06.02.1998, 23.03.1998 மற்றும் 19.03.1998 மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர்–12 அவர்களை நே.மு.க.எண்.10494/94/பி3, நாள்–02.03.1998 கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும், சுவர்ணஜெயந்தி திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி முதற்கட்டமாக இந்நகரம் முழுவதும் குடும்பங்களின் கணக்கெடுப்பு பணி 09.03.1998 முதல் 09.04.1998 வரை வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்பு செய்தும் திட்ட வழிகாட்டியின்படி பொருளாதாரம் சாராத அளவுகளின் வாயிலாக மதிப்பெண்கள் கொடுத்து முன்னுரிமைகளின் அடிப்படையில் குடும்பஙகளை வறுமைக் கோட்டின் மேலாகவும், கீழாகவும் பட்டியல் தயார் செய்யப்பட்டதை இந்நகரமன்றம் தனது தீர்மான எண்.300, நாள்–24.11.1998ல் ஒப்புதல் அளித்தது.

<u>**கணக்கெடுப்பின் விவரம் பின்வருமாறு**</u>

| வ. எண் | மொத்த மக்கள் தொகை 2011 கணக்கெடுபின்படி | மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை (2003ன்படி) | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 55955 | – | 3101 | |

இந்நகரத்தில் மொத்தம் வறுமைக் கோட்டிற்க்கு கீழ் மக்கள் அதிகமாக வாழும் குடிசைப் பகுதிகள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளாகவும் அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

<u>**(அ) அஙகீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகள்**</u>

| | |
|---|---|
| 1 | தாருகான் தெரு |
| 2 | லேபர் தெரு |
| 3 | அழகப்பன் தெரு |
| 4 | டவுன் தெரு |
| 5 | போத்தன் காலனி |
| 6 | கோட்டை தெரு |
| 7 | ஏரிக்கரை தெரு |
| 8 | பெரிய தண்டுகாரன் தெரு |
| 9 | சின்ன தண்டுகாரன் தெரு |
| 10 | கோனன் தெரு |
| 11 | முனுசாமி தெரு |
| 12 | கண்ணபிரான் தெரு |
| 13 | ஏரிக்கீழ் தெரு |

<u>**ஆ) அங்கீகரிக்கப்படாத குடிசை பகுதிகள் – உண்டு**</u>

| | |
|---|---|
| 1 | பெரிய அசன்புரா தெரு |
| 2 | கொல்லப்பாளையம் |
| 3 | மேஸ்திரி லத்தீப் தெரு |
| 4 | நவாப் தெரு |

| | |
|---|---|
| 5 | நவாத்திவாடி |
| 6 | அப்பாய் தெரு |
| 7 | பி.டி.யோகலிங்கம் தெரு |
| 8 | தந்தை பெரியர் தெரு |
| 9 | வ.உ.சி தெரு |
| 10 | தோப்புக்கானா தெரு |
| 11 | திருநாவுக்கரசு தெரு |
| 12 | வேலூர் மெயின் ரோடு 3– வது குறுக்கு தெரு அண்ணாநகர் |
| 13 | வேலூர் மெயின் ரோடு 4– வது குறுக்கு தெரு அண்ணாநகர் |

**40.** மத்திய அரசின் SJSRY திட்டம் 2015 ம் ஆண்டோடு முடிவுற்று தற்போது NULM திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே SJSRY சம்மந்தப்பட்ட திட்ட அறிக்கை ஏதுமில்லை.

இந்நகராட்சி நிர்வாகத்திற்கு அறிக்கையாண்டில் உறுதுணை புரிந்த துப்புரவு அலுவலர், அனைத்து நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் மேலும் அவ்வபோது தக்க அறிவுரைகள் வழங்கிய வேலூர் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக உதவி திட்ட அலுவலர் மற்றும் நகராட்சி நிர்வாக மணட்ல இயக்குநர், அவர்களுக்கும், இந்நகராட்சியின் வளர்ச்சித் திட்டப் பணிகளில் பெரும்பங்கு கொண்டு உடனுக்குடன் தகுந்த அறிவுரைகள் மற்றும் உதவிகள் வழஙகிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் இந்நகர மேம்பாட்டிற்கு என்றென்றும் உறுதுணை புரியும் தமிழ்நாடு நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறையின் ஆணையர் மற்றும் செயலர் அவர்களுக்கும், இந்நகராட்சியின் நிர்வாக நலனில் பெரும் அக்கறை கொண்டு விளஙகும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எனது உளஙகனிந்த நன்றியறிதலைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்(பொ),
ஆற்காடு நகராட்சி.

இடம்:- ஆற்காடு.
நாள்:- 10.08.2020